## Sirahukal News's post

Sirahukal News
9 November 2025 ·

இடர்கால நிவாரணம் இராணுவத்தினரினால் உலருணவுப் பொதிகள் விநியோகம்

சதீக் சலாம்

காயங்கேணி, காகிதநகர், தியாவட்டவான், மற்றும் மயிலங்கரச்சை பிரதேசத்தைச்சேர்ந்த 100 பொதுமக்களுக்கான பெறுமதிவாய்ந்த இடர்கால உலருணவுப்பொதிகளை இராணுவத்தினர் நேற்று (08) வழங்கி வைத்தனர்.

இவ்வுலருணவுப்பொதிகள் காயங்கேணியிலுள்ள 30 குடும்பங்களுக்கு காயங்கேணியிலுள்ள கொரல் கோவ் என்ற இடத்திலும் தியாவட்டவான், காகித நகர், மயிலங்கரச்சை போன்ற பிரதேசத்தில் வாழும் 70 குடும்பங்களுக்கான உலருணவுபொதிகளை காகித நகர் அபூ மண்டபத்திலும் வைத்து வழங்கி வைத்தனர்.

இவ்வுலருணவுப்பொதிகளை பெறுவதற்கான பயனாளிகள் இன, மத வேறுபாடின்றி குறித்த பிரதேச கிராம சேவகரூடாக தெரிவு செய்து வழங்கியிருந்தமை சிறப்பம்சமாகும்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் JSBW.பல்லேகும்புற மற்றும் 23வது படைப்பிரிவின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் GPP.குலதிலக ஆகியோரும் கொழும்பு ரொட்டரி கழகத்தலைவர் செருவன் பெர்னாண்டோ புள்ளை, ராஜன் அமரசிங்க (Principal Of Prima Baking Training Center), லலித் விஜயவர்த்தன (Manging Director of Leisure and Beyond), ஜெம் அன்ட் ஜவலரி உரிமையாளர் விதுர ஹல்வதுறவின் குடும்பத்தினர், ரஸல் உற்பத்தி உரிமையாளர் கே.குசால் பெரேரா ஆகியோரும் இவ்வுலருணவுப்பொதிகளை வழங்கி வைத்தனர்.

மிகுந்த கஸ்டமான நேரத்தில் மழை காரணமாக தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த உதவி எமக்கு மிகுந்த பயனளிக்கும் என இவ்வுலருணவுப்பொதிகளை பெற்றுக்கொண்டோர் தெரிவித்தனர்.

அத்துடன், விஷேடமாக மாற்றுத்திறனாளிகள், நோயாளிகளும் முன்னுரிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

இராணுவத்தினர் இவ்வாறான மனிதாபிமான உதவிகளை தொடர்ந்தும் இப்பிரதேசத்தில் மேற்கொண்டு வருகின்றமை மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

See translation









+15

System dark mode is now on. Switch Facebook to always match system setting? Yes